செ.வெ.எண்.229/2009(செமதொஅ) நாள் : 31.07.2009.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் 75 சதவீத கிராமங்கள் தன்னிறைவு பெற்று விளங்குகிறது என மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் தெரிவித்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதியதாக பொறுப்பேற்றுள்ள உதவிப் பொறியாளர்கள் மற்றும் பணி மேற்பார்வையாளர்களுக்கு புத்தாக்க நிகழ்ச்சி மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட மாவட்ட அளவிலான புத்தக வெளியீட்டு விழா மாவட்ட ஊராட்சி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு 2009-2010 ஆண்டிற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட புத்தகத்தை வெளியிட்டு, புதிதாக பணியில் சேர்ந்த 59 அலுவலர்களை ஊக்குவித்து விழாப் பேருரையாற்றியதாவது,

“ காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதியதாக பொறுப்பேற்றுள்ள உதவிப் பொறியாளர்கள் மற்றும் பணி மேற்பார்வையாளர்களுக்கு புத்தாக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஆட்சி காலத்தில் பணி நியமன தடைச் சட்டத்தால் 3.5 இலட்சம் அரசு பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு, பணி நியமன தடைச் சட்டம் நீக்கப்பட்டு 3.40 இலட்சம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாவட்டத்தில் போதிய பணியாளர்கள் இல்லாத போதே தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகளில் சிறப்பாக செயல்பட்டு மாநிலத்திலே முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உதவிப் பொறியாளர்கள் மற்றும் பணி மேற்பார்வையாளர்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு பணியமர்த்தப்பட்டுள்ளனர். நீங்களும் சிறப்பாக பணியாற்றினால் நமது மாவட்டம் இனி என்றைக்கும் முதலிடம் வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை. தமிழக அரசு சிறப்பாக பணியாற்ற அரசு பணியாளர்கள் தான் காரணம். நமது மாவட்டத்தில் அரசு பணியாளர்கள் இரவு பகல் பாராமல் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னோடி திட்டமாகும். இத்திட்டத்தின் நோக்கமே நகர்புற மக்கள் அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்றிருப்பது போல் கிராமபுற மக்களும் அனைத்து வசதிகளையும் பெறவேண்டும் என்பதே ஆகும். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் ஒரு கிராமத்திற்கு ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர், சிமெண்ட் சாலை, நூலகம், சோடியம் விளக்கு, சுடுகாடு போன்ற பணிகள் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தினால் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் தன்னிறைவு பெற்றுள்ளன. இன்று பொறுப்பேற்கும் அலுவலர்கள் சிறப்பாக பணியாற்றி, நமது மாவட்டம் அனைத்து துறைகளிலும் தன்னிறைவு பெற்று விளங்கிட அனைவரும் உழைத்திட வேண்டும். அதற்கு எங்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் என்றென்றும் இருக்கும்.” என்று தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்ட கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) டாக்டர்.இரா.ஆனந்தகுமார்,இ.ஆ.ப. அவர்கள், தனது வாழ்த்துரையில், “ இன்றைய தினம் புத்தாக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள உதவிப் பொறியாளர்கள் மற்றும் பணி மேற்பார்வையாளர்களுக்கு அன்புடன் வரவேற்கிறேன் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் மூன்றாவது கட்டப் பணிகளில் காஞ்சிபுரம் மாவட்டம் ரூ.43 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளை நிறைவேற்றி மாநிலத்திலேயே முதலிடத்தில் உள்ளது. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ், உத்திரமேரூர், திருப்பெரும்புதூர், மதுராந்தகம் ஆகிய பகுதிகளில் குளங்கள் சீர்படுத்தும் பணிகள் முடிந்து விட்டன. இத்திட்ட பணிகளிலும் நமது மாவட்டம் நல்லதொரு வளர்ச்சியில் உள்ளோம். காஞ்சிபுரம் புண்ணிய தலமாகும். இங்கு பணியாற்றுவது சிறப்பான ஒன்றாகும். இங்கு நீங்கள் பணியாற்ற எந்த தடையும் இல்லை. ஆகவே நீங்கள் சிறப்பாக பணியாற்றி உயர்வடைய விழைகிறேன்.” என்று கூறினார்.

மாவட்ட ஊராட்சி தலைவர் திரு. த.துரைசாமி அவர்கள் தலைமையுரையாற்றினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் திரு. எஸ்.நவநீதன் திட்ட விளக்கவுரையாற்றினார். முன்னதாக விழாவிற்கு வருகை தந்தவர்களை மாவட்ட ஊரக வளர்சசி முகமையின் உதவி திட்ட அலுவலர் திரு.எம்.அனந்தகுமார் வரவேற்றார். நிறைவாக வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றிய உதவி பொறியாளர் திருமதி.சசிகலா கூறினார். காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் திரு.பி.எம்.குமார், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு. ஆ.மனோகரன், காஞ்சிபுரம் நகர்மன்ற உறுப்பினர் திரு.ஆறுமுகம், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.